கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 ஆண்டுகள் 22.02.2001 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 20.11.2012

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (74)



**74. யாழ்ப்பாணத்தில் புலிகள் உருவாக்கிய சவூதி அரேபியா!**

எமது வதை முகாமுக்கு புதிதாக வந்த அந்த மீசைக்காரர் யார் என்பதை இரண்டொரு நாட்களிலலேயே நாம் அறிந்து கொண்டோம்.

அவரது பெயர் வேலாயுதபிள்ளை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தின் கிழக்குப் புறமாக அவரது வீடு அமைந்துள்ளது. அவரது தொழில் தச்சு வேலை செய்வது. அவரது மாமனார் (மனைவியின் தகப்பனார்) ஒரு புகழ்பெற்ற தச்சுவேலைக்காரரும் தீவிர தமிழ் காங்கிரஸ் கட்சி ஆதரவாளாரருமாகும். ஆனால் இந்த வேலாயுதபிள்ளை கம்யூனிஸ்ட் கட்சிக்காரர். கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்டர் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

புலிகளின் 'ஆஸ்தானக் கவிஞராக' இருந்த புதுவை இரத்தினதுரைக்கும் இந்த வேலாயுதபிள்ளை உறவினர். புதுவை இரத்தினதுரை ஆரம்ப காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சிப் பக்கம் தலை வைத்துப் படுத்திற்கு காரணகர்த்தாவாக இருந்த, அவரது சிறிய தகப்பனாரான திருநெல்வேலியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சிக்காரரான 'தேர்க் கந்தசாமி' இந்த வேலாயுதபிள்ளைக்கு மைத்துனர் முறையானவர்.

அத்துடன் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, சென்னையில் அந்த இயக்கத்தின் தலைவர் பத்மநாபாவுடன் சேர்த்து புலிகளால் கொலை செய்யப்பட்ட யோகசங்கரி அவர்களின் மனைவியின் தந்தையாரின் உடன் பிறந்த தம்பி இந்த வேலாயுதபிள்ளை.

புலிகளைப் பற்றி இவர் தொடர்ச்சியாகப் பகிரங்க இடங்களில் விமர்சனம் செய்ததிற்கான பரிசாகவே வேலாயுதபிள்ளை இப்பொழுது இங்கே கூட்டி வரப்பட்டிருக்கிறார். அவர் பெரிய 'தேசத்துரோக' குற்றம் எதையும் செய்திருக்கவில்லை எனினும், தம்மை விமர்ச்சிப்பவர்களைப் புலிகள் தமது மன்னிக்க முடியாத எதிரிகளாகவே பார்ப்பதுண்டு. ஆகையால் இந்த வேலாயுதபிள்ளை என்ற புலிகளின் எதிரிக்கு சில மாதங்களாவது நிட்சயம் சிறைத் தண்டனை உண்டு.

அதுவும் அவர் ஒரு கம்யூனிஸ்ட்டாக வேறு இருப்பதாலும், தப்பித்தவறி யோகசங்கரியின் மாமனாரின் தம்பியாகப் பிறந்துவிட்டதாலும், வேலாயுதபிள்ளைக்கு மேலதிக தண்டனையும் கிடைக்கக்கூடும்.

மறுபுறத்தில் புலிகளைப் பொறுத்த வரையில் தம்மால் கைது செய்யப்படுபவர்கள் எவ்வளவுதான் பெரிய குற்றவாளிகளாக இருந்தாலும், அவர்களிடம் ஏதாவது விசேட திறமைகள் இருக்குமாக இருந்தால், அதைப் பயன்படுத்திக் கொள்ளவும் புலிகள் தயங்கமாட்டார்கள். அவர்களால் இரகசியமாக மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த வின்சன்ற் என்பவர், திறமையான துவிச்சக்கர வண்டி திருத்துனர் என்பதை அறிந்து கொண்டு அவரை நன்கு இறுதிவரை பயன்படுத்தினர். கைதிகளாக வந்தவர்களில் சுவர்களுக்கு வர்ணம் பூசக் கூடியவர்களைக் கொண்டு தமது இருப்பிடங்களுக்கு வர்ணம் பூசுவித்தனர். வேறு சிலரைக் கொண்டு விறகு கொத்துவித்தனர்.

எமது புதிய விருந்தினர் வேலாயுதபிள்ளை சிறந்த தச்சு வேலைகாரர் என்பதைத் தெரிந்து கொண்ட புலிகள் அவரையும் பயன்படுத்த எண்ணினர். அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் ஒரு சிறிய விடயம் என்ற போதிலும், பெரிய ஒரு சதிகாரரை விசாரிப்பது போல, அவரது விசாரணையும் ஒரு பக்கம் தொடர்ந்த வண்ணம் இருந்தது. விசாரணையின் போது எல்லோருக்கும் வழங்கப்படும்; 'தான தருமங்களும்' அவருக்கும் முறைப்படி வழங்கப்பட்டது.

அதேநேரத்தில் புலிகள் புதிதாகக் கட்ட எண்ணிய விசாரணைக் கொட்டில்களை அமைக்கும் பணியையும் அவரைக் கொண்டு செய்வித்து வந்தனர். கடுமையான உடல் உழைப்பாளியாகிய அந்தத் தொழிலாளியும், சிறைச்சாலைக்குள் முடங்கிக் கிடப்பதைவிட வெளியே சென்று அந்த வேலையில் ஈடுபடுவதை ஓரளவு விரும்பிச் செய்து வந்தார்.

வழமைபோல ஒரு நாள் கொட்டில் அமைப்பதற்கான வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர், சற்று நேரம் கழித்து தலையிலிருந்து இரத்தம் சொட்டச் சொட்ட திரும்பவும் சிறைக்குள் அழைத்து வரப்பட்டார். உள்ளே இருந்தவர்களுக்கு இந்த மாதிரியான காட்சிகள் எல்லாம் பழக்கப்பட்டவை என்ற போதிலும், வேலாயுதபிள்ளைக்கு திடீரென என்ன நடந்தது என்பது வியப்பாக இருந்தது.

வேலாயுதபிள்ளைக்கு செய்ய வேண்டிய முதலுதவிச் சிகிச்சைகளைச் (வேறு என்ன உப்புத் தண்ணீர் போடுவதுதான்) செய்த பின்னர், என்ன நடந்தது எனச் சிலர் இரகசியமாக அவரிடம் விசாரித்தோம். நடந்தது இதுதான்.

வேலாயுதபிள்ளை வழமைபோல கொட்டில் அமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, அங்கு வந்த புலி உறுப்பினன் ஒருவன் அங்கிருந்த புதிய மரம் அறுக்கும் வாள் ஒன்றை எடுத்து, அங்கிருந்த மரம் ஒன்றை அறுத்துப் பார்த்திருக்கிறான். மரம் அறுக்கும் நுட்பம் அவனுக்குத் தெரியாதபடியால், அந்தப் புத்தம் புதிய வாள் வளைந்து விட்டது. இதைக்கண்டு பதறிய வேலாயுதபிள்ளை 'ஐயோ வாள் நெளிந்து விட்டதே? பொறுப்பாளர் என்னைப் பேசப் போறாரே?' என்று கூறியிருக்கிறார்.

அதற்கு அந்த புலி இளைஞன் சர்வ சாதாரணமாக 'அது சவூதியில் எடுத்த வாள் தான்' என்று கூறியிருக்கிறான். வேலாயுதபிள்ளைக்கு அவன் கூறியது விளங்காதபடியால், அவனது கூற்றுக்கு அர்த்தம் கேட்டிருக்கிறார்.

அவன் சவூதி என்று குறிப்பிட்டது, சவூதி அரேபியா என்ற நாட்டையாகும். ஆனால் அவன் வளைத்த வாள் சவூதி அரேபியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதல்ல. இங்கு அவன் சவூதி என்று அவன் குறிப்பிட்டது, யாழ்ப்பாணத்தில் முஸ்லீம் மக்கள் வாழ்ந்த பகுதியையாகும். புலிகள் 1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், வடக்கின் ஏனைய பகுதிகளிலும் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த முஸ்லீம் மக்களை உடுத்த துணியுடன் விரட்டியடித்து இனச் சுத்திகரிப்புச் செய்த பின்னர், அவர்களது உடமைகள் அத்தனையையும் ஒன்றுவிடாமல் அபகரித்துத் தமதாக்கிக் கொண்டனர்.

யாழ்ப்பாண நகரின் வர்த்தக நிலையங்களில் கணிசமான ஒரு பகுதி முஸ்லீம் வர்த்தகர்களுக்குச் சொந்தமாக இருந்ததால், அவர்களது நிறுவனங்களில் இருந்த பெருந்தொகையான நானாவிதப் பொருட்கள் புலிகள் வசமாகின. அப்படி ஒரு முஸ்லீம் வர்த்தகரிடமிருந்த எடுத்த அந்த வாளைத்தான், இந்த புலி இளைஞன் 'சவூதியிலிருந்து எடுத்தது' (இலவசமாக) எனக் கூறியிருக்கிறான். அதாவது முஸ்லீம்கள் என்றால், அவர்கள் சவூதி அரேபியாவிலிருந்து



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

BBC
Newsnow

வந்தவர்கள் என்பதுதான், புலிகளின் அகராதியிலுள்ள அர்த்தம்.

இதைக் கேட்ட வேலாயுதபிள்ளைக்கு ஆத்திரம் வந்திருக்கிறது. புலிகள் முஸ்லீம் மக்களை வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றியதுமல்லாமல், அவர்களது பொருட்களைச் சூறையாடி இப்படிப் பழாக்குகிறார்களே என வேதனைப்பட்டிருக்கிறார். அதுவும் ஒரு நல்ல தொழிலாளியைப் பொறுத்தவரை, தான் தொழில் செய்வதற்குப் பயன்படுத்தும் ஆயுதங்களைத் தெய்வமாக மதிப்பவன். அதற்காகவே விஜயதசமி கொண்டாடப்படும் நாட்களில் ஆயுத பூஜைக்கென தனியாகவே ஒரு நாளை தமிழர்கள் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இப்படியான ஒரு சூழ்நிலையில் மனம் வருந்திய வேலாயுதபிள்ளை, தனது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, அந்த இளைஞனுக்குப் புத்திமதி கூறும் தோரணையில் சில விடயங்களைக் கூறியிருக்கிறார்.

அதாவது எவரிடமிருந்தும் இலவசமாக ஒரு பொருளை எடுக்கக்கூடாது, அப்படி எடுத்தாலும், அதைப் பொறுப்பில்லாமல் பயன்படுத்தி சேதப்படுத்தக்கூடாது என, அந்த இளைஞனுக்கு வேலாயுதபிள்ளை விளக்கிக் கூறியிருக்கிறார். அதற்கு தான் அறிந்த சில உதாரணங்களையும் வேலாயுதபிள்ளை கூறியிருக்கிறார்.

அத்துடன் வேலாயுதபிள்ளை அந்த இளைஞனிடம், 'நீங்கள் உங்களை ஒரு விடுதலை இயக்கம் என்று கூறுகிறீர்கள். அப்படியான நீங்கள் பொதுமக்களிடம் இருந்து எதையும் இலவசமாக எடுக்கக்கூடாது. சீனாவில் புரட்சி நடந்த போது, மாஓ சீன மக்கள் இராணுவத்துக்கு விடுத்த 8 கட்டளைகளில் ஒன்று, பொதமக்களிடமிருந்து ஒரு துண்டு நூலையோ ஊசியையோ இலவசமாக எடுக்க்கூடாது என்பதாகும். அதேபோல, வியட்நாம் புரட்சியின் போது, விடுதலைப் போராளிகள் ஒரு கரும்புத் தோட்டத்துக்குள்ளால் செல்லும்போது, சில கரும்புகள் முறிந்ததிற்காக, அந்தத் தோட்ட உரிமையாளரிடம் மன்னிப்புக் கேட்டதுடன், அதற்கு நஸ்ட ஈடும் வழங்கினார்கள்' எனக் கூறியிருக்கிறார்.

வேலாயுதபிள்ளை கூறியதைக் கேட்டு ஆத்திரமடைந்த அந்த புலி இளைஞன், அங்கிருந்த சுத்தியல் ஒன்றை எடுத்து வேலாயுதபிள்ளையின் மண்டையில் ஒரு போடு போட்டிருக்கிறான். அதனால் அவரது மண்டை பிளந்து இரத்தம் ஆறாகப் பெருகியிருக்கிறது. அதைத் தொடர்ந்து அங்கு வந்த சிரேஸ்ட புலி உறுப்பினன் ஒருவன் நடந்த விடயத்தைக் கேட்டுவிட்டு, தாக்கியவனைக் கண்டிப்பதற்குப் பதிலாக, தாக்குதலுக்குள்ளான வேலாயுதபிள்ளையைக் கண்டித்துவிட்டு, அவரைச் சிறைக்குள் அனுப்பி வைத்திருக்கிறான்.

இதுதான் அன்று நடந்த சம்பவம். ஆனால் இரண்டு நாள் கழித்து வேலாயுதபிள்ளை மீண்டும் புலிகளுக்கு கொட்டில் போடும் வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்த இடத்தில் இன்னுமொரு சம்பவத்தையும் குறிப்பிடுவது பொருத்தம் எனக் கருதுகின்றேன்.

பொதுவாக மனிதர்கள் திருடர்களிடமிருந்து தமது பெறுமதியான பொருட்களைப் பாதுகாப்பதற்காக, அவற்றை நுட்பமான முறைகளில் இரகசியமாக மறைத்து வைப்பது வழமை. இன்றைய நாட்களில் என்றால், வங்கியிலுள்ள பாதுகாப்புப் பெட்டகங்களில் வசதியானவர்கள் தமது நகைகள், காணி உறுதிகள், முக்கியமான பத்திரங்கள் என்பவற்றைப் போட்டு வைப்பார்கள். ஆனால் முன்னைய காலங்களில் வீட்டிலுள்ள எங்காவது ஒரு இடத்தில் மறைத்து வைப்பதுதான் வழமை. கூடுதலாக சமையல் கட்டிலுள்ள மாவு, சீனி என்பன வைக்கும் பாத்திரங்களில் மறைத்து வைப்பது ஒரு பொது நடைமுறை.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்கள் புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட பின்னர், ஒருமுறை யாழ்.போதனா வைத்தியசாலையில் தமது குடும்ப அங்கத்தவர் ஒருவரை தங்க வைத்து சிகிச்சை அளித்து வந்த ஒரு குடும்பத்தினர், தமது அவசர தேவை கருதி, வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள மருந்தகம் ஒன்றில் சுடுநீர்ப் போத்தல் ஒன்றை வாங்கியிருக்கின்றனர். அதை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்து கழுவுவதற்காக முன் மூடியையும், பின்பக்கப் பகுதியையும் கழற்றியபோது, பின்பக்கத்திலிருந்து ஒரு தங்கச் சங்கிலியும், ஒருசோடி காப்பும் விழுந்திருக்கின்றது. அந்த சுடுநீர்ப் போத்தலை வாங்கியவருக்கு, அதைப் பார்த்ததும் அதிசயத்துக்கு மேல் அதிசயம்.

பின்னர்தான் தெரிந்தது, அந்தச் சுடுநீர்ப் போத்தல் யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லீம் மக்களில் ஒருவருக்குச் சொந்தமானது என்பதும், அவர்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட அது, எப்படியோ இந்த மருந்தகத்துக்கு அதன் உரிமையாளர் அறிந்தோ அறியாமலோ விற்பனைக்கு வந்துள்ளது என்பதும்.

இப்படி எத்தனை எத்தனையோ? இதில் வேதனையான விடயம் என்னவெனில், வடக்கிலிருந்து முஸ்லீம் மக்கள் புலிகளால் வெளியேற்றப்பட்டு 22 வருடங்கள் உருண்டோடி விட்டன. முஸ்லீம்களை வெளியேற்றிய புலிகள் அழிக்கப்பட்டு மூன்றரை ஆண்டுகள் கடந்து விட்டன. முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட புலித்தலைமை 'முஸ்லீம்களை வெளியேற்றியது' தவறுதான் என கூறியது போலவே, இன்னமும் புலம்பெயர் நாடுகளில் வாழும் புலிகளின் எச்ச சொச்சங்களும் ஒப்புக்காக கூறி வருகிறார்கள். ஆனால் சந்தர்ப்பம் வரும்போது (அண்மையில் நடந்து முடிந்த கிழக்கு மகாணத் தேர்தல் இதற்கு ஓர் உதாரணம்) இந்த புலிகளின் எச்ச சொச்சங்கள் முஸ்லீம்கள் தொடர்பாக இனவாதம் கக்குவார்கள். மேலும் முஸ்லீம்களை வடக்கில் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுவது குறித்து, அரசியல்வாதிகள் இன்னமும் மாநாடு கூட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, 2009இல் இறுதிக்கட்டப் போரின்போது இடம் பெயர்ந்த மக்களில் 99 வீதத்தினரை அரசாங்கம் மீளக் குடியமர்த்திவிட்ட போதிலும், மீதி 1 வீதத்துக்காக கூப்பாடு போடும் 'தமிழீழ' அரசியல்வாதிகளும், ஐக்கிய நாடுகள் சபை வரை மகஜர் கொண்டு செல்லும் தமிழக அரசியல்வாதிகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும், 22 வருடங்களாக அல்லல்படும் இந்த முஸ்லீம் மக்களுக்காக ஒரு சுட்டு விரலைத் தன்னும் அசைக்காமல் மௌனம் காத்து வருகின்றன.

தொடரும்.....

முன்னைய பதிவுகள்